யாதானும் நாடாமால் ஊராமால்

# அனைத்துலகப் பொங்குதமிழ்ச் சங்கம்

(உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் கூடம்)

## ANAITHULAGA PONGUTHAMIZH SANGAM

(பதிவு பெற்ற தன்னாட்சி அமைப்பு) அரசு பதிவு எண் : 26/2022

ஜெருசலேம் பல்கலைக் கழகம் & தில்லி கலை இலக்கியப் பேரவை வழங்கிய சிறந்த தமிழ்ப்பணிக்கான விருது பெற்ற சங்கம்.



# முப்பெரும் விழா

**நாமக்கல் கவிஞர் 135 வது பிறந்த நாள் விழா,**
**நூல்கள் வெளியீட்டு விழா,**
**விருது வழங்கும் விழா**

முனைவர் **அ.இராஜலட்சுமி** அவர்களுக்கு

**நாமக்கல் கவிஞர் இலக்கிய விருது** வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

பன்முகப் பார்வையில்

# நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

## ஆய்வுக் கோவை



தொகுப்பாசிரியர்கள்

பாவலர் சுந்தரபழனியப்பன்

பாவலர் பொன். ஆதவன் முனைவர் இரா. ஹேமலதா முனைவர் க. அரிகிருஷ்ணன்

# பன்முகப் பார்வையில்
# நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை
(ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு)


**தொகுப்பாசிரியர்கள்**

மதிப்புறு முனைவர் பாவலர் சுந்தரபழனியப்பன்
மதிப்புறு முனைவர் பொன். ஆதவன்
முனைவர் இரா. ஹேமலதா
முனைவர் க. அரிகிருஷ்ணன்



**வெளியீடு**

பண்ணுருட்டி
சகுந்தலா பதிப்பகம்
9842345719

60. நாமக்கல் கவிஞரி...
முனைவர் ஜெ. ஜெயசாந்தி 259

61. நாமக்கல் கவிஞரும் தமிழக மறுமலர்ச்சியும்
முனைவர் பா.கலையரசி 263

62. நாமக்கல் கவிஞரின் பன்முகத்தன்மைகள
முனைவர் மு.கனிச்செல்வி 267

63. தனித்தமிழ் கவிஞரின் பார்வையும் புரிதலும்
கவிஞர் மு. சத்தியா 272

64. கவிஞர் சிந்தித்த விடுதலைப் போராட்ட வீரர்கள்
கவிஞர் மு. சுரேஷ் குமார் 275

65. நாமக்கல் கவிஞரின் காந்தியச் சிந்தனைகள்
முனைவர் ஜோ.சூசை ஜெஸிந்தா மெர்ஸி 279

66. நாமக்கல் கவிஞரின் காந்திய சிந்தனை
முனைவர் நா. தனலட்சுமி 284

67. ஓவியக்கவிஞர்
கவிஞர் லெ. சுமதி 290

68. நாமக்கல் கவிஞர் பாடல்களில் தமிழுணர்வு
முனைவர்இல.பூர்ணிமாஜோதி 295

69. நாமக்கல் கவிஞரின் அறிவுரைமலர் - ஓர்ஆய்வு
கவிஞர்இரா. வேதகனி 299

70. ஆதிசங்கரரும் நாமக்கல் கவிஞரும்
முனைவர் அ. இராஜலட்சுமி 303

71. நாமக்கல் கவிஞரின் சமுதாய சிந்தனைகள்
முனைவர் தே தேன்மொழி 307

72. பாட்டாளி மக்களின் பாவலர்
கவிஞர் முத்தையா மோகன் 311

73. படைப்புலகில் வெ.ராமலிங்கம் பிள்ளை
கவிஞர் ரெ. ராஜேஸ்வரி, 315

74. நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை
கவிஞர் லிங்கன் 318

75. நாமக்கல் கவிஞரும் தமிழ் அறிஞர்களும்
கவிஞர் சீதா கலியபெருமாள் 322

# ஆதிசங்கரரும் நாமக்கல் கவிஞரும்

முனைவர் அ. இராஜலட்சுமி
உதவிப்பேராசிரியர்
கொங்குநாடுகலைஅறிவியல்கல்லூரி, கோயம்புத்தூர்

## முன்னுரை

ஆதிசங்கரரின் குரு கோவிந்தபாதர் என பெயர் கொண்ட மகான் அவர் மேல் இருந்த அன்பு, பக்தி, மரியாதை ஆகியவற்றின் காரணமாகத் தான் படைத்த அற்புதத்திற்குப்"பஜகோவிந்தம் என்று பெயரிட்டுள்ளார், என்பதைஜே.கே. சிவன் என்பவர் தனது கட்டுரைப் பக்கத்தில் தெளிவுப்படுத்தியுள்ளார்.பஜனை போல் அல்லாமல் அப்பாடலில் உள்ள கருத்துக்கள் மனிதனைச் சிந்திக்க வைக்கக்கூடியவேதாந்தகருத்துக்களைஉள்ளடக்கியதாக உள்ளது.த்வாதசமஞ்சரிக ஸ்தோத்ரம் எனப்படும்.பஜகோவிந்தத்தின் முதல் 12 ஸ்லோகங்களைச்சங்கரர்மொழிந்தார்.சதுர்தசமஞ்சரிக ஸ்தோத்ரம் அடுத்த 14 ஸ்லோகங்கள் அவருடைய ஒவ்வொரு மாணவர்களும் ஆளுக்கு ஒன்றாக எழுதினர். மறுபடியும் ஆதி சங்கரரே கடைசி ஐந்து பாடல்கள்இயற்றி 31 பாடல்கள் கொண்ட பஜ கோவிந்தத்தைப் பூர்த்தி செய்தார்.

## நவீனத்துவம்

1893 ஆம் ஆண்டில்ஆஸ்திரிய நாட்டு கவிஞர் ஷ்யூகோவான் ஹா.்.ப்மன்ஸ்தல் (Hugovonttofmansthal) நவீனத்துவம் பற்றி 'இன்று இரண்டு விதமான விஷயங்கள் நவீனமயமானவையாக இருக்கின்றன. வாழ்க்கையை ஆய்வு செய்தல்,வாழ்க்கையிலிருந்துவிலகிச் செல்லுதல், மனித மனத்தின் உள்ளார்ந்த வாழ்க்கையை அல்லது கனவுகளைப் பகுப்பாய்வு செய்வதையும்,நம்ப முடியாத மாயத் தோற்றங்கள், கண்ணாடியில் தோன்றுவது போன்ற மாயப் பிம்பங்கள்,கனவுத்தோற்றங்கள் போன்றவை மீது கவனம் செலுத்துவதையும் இதோடு சேர்த்துக் கொள்ளலாம். பழைய மேஜை நாற்காலியைப் போலவே புதிய கண்டு பிடிப்பான நியூரானும் நவீன மயமானதே' பால்பூர்கேயும் ( Paul Bourget) புத்தரும் நவீன மானவார்களே. நவீனம் என்பது ஒரு மனநிலையை ,பெருமூச்சை, மனச்சாட்சியின் குத்தலைப்பகுத்துப்பார்த்தலே. வண்ணங்கள், பளிச்சிடும் உவமை, அற்புதமான தொடர், உருவங்கள் ஆகியவற்றுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தலே. (இசங்கள்ஆயிரம்ப.35)

நவீனத் துவத்தின் வகையில். பக்தி நெறியிலும் தத்துவ நெறியிலும் அதிக பங்களிப்பு தந்த ஆதிசங்கரரின் சிந்தனைகளைக் கண்ட பஜகோவிந்தத்தின் கருத்துக்களைத் தமிழில் புனைந்த நாமக்கல்லாரின் வரிகளில் இன்புறுவதாக இப்பகுதி அமைகின்றது.

சம்ப்ராப்தே சந்நிஹிதே காலேநஹி நஹிரக்ஷதிடுக்ருங்கரனே மரணம் உன்னை நெருங்கி வரும் முன்பே மெய் ஞானத்தை (உண்மையான அறிவை) பெற்று விடு.நீ சம்பாதித்த உலக இலக்கண அறிவு எதுவும். உன்னை மரண காலத்தில் காப்பாற்றாது என்ற பஜகோவிந்தத்தின் முதல்பாடலில் அமைந்த கருத்துகளுக்குப் புத்துயிர்தந்து கருத்துச் செறிவூட்டப்பட்ட நிலையில், கோழையே! காலன் வந்து வாவெனக்கூவும்போது கோ! என அழுது நொந்தே ஆ!என அலறு வாயே! என்றிட்ட இடத்தில் தமிழ் மொழியைப் போற்றி வளர்க்கும் வேளையில் மரபுகளை மாற்றாமல் புதிய வடிவம் கொடுத்து இருப்பது காலத்துக்குத்தக்க தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழுக்கே உரிய பண்பாக உள்ளது. மேலும், மூட ஜஹீஹிதனஆகமத்ருஷ்ணாம் குரு ஸத்புத்திம்மனஸிவித்ருஷ்ணாம் செல்வம் சேர்க்க வேண்டும் என்ற தாகத்தை விட்டு விடு, மூட மதியே.. நல்ல எண்ணத்துடன், பலனில் ஆசை இல்லாமல் எந்த செயலையும் செய் என்று கூற வந்த இடத்தில் செல்வத்தைப்பேய்த்தேர் என்று உருவகப்படுத்துகின்றார் கவிஞர்.

செல்வமே செல்வம் என்னும் தீயபேய்த்தேர்தா கத்தை வேதனைமிகுந்தநோயாம்; கவிஞர் செய்தது மொழிபெயர்ப்பல்ல. மூல சுலோகத்தின்கருப்பொருளைஉள்வாங்கிக் கொண்டு அதைத்தமிழில் எழுதினார்.கூசயளே உசநயவடைிே என்னும் வகைமையைச் சார்ந்த எழுத்துகள் அவை.கவிஞர் சுலோகத்தை எடுத்துக் கொண்டு விளையாடுகிறார். பேய்த்தேர்என்றபெயர்ச்சொல்லானதுகானல் நீர்; கானல், கானனீர் என்றுபொருள்கொள்ளப்படுகிறது.

பேய்த்தேர்ப் பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார்
(தேவா. 1145, 10)

என்று தேவாரமும் கானல்நீர் பற்றி குறிப்பிடுகின்றது. கழுது, பாலைவனம், பாலை, கழுதிரதம், கழுதாழி என்று தமிழ்ப்பேரகர முதலியும் சான்றுகள் தருகின்றது.

இல்லாத ஒன்றை இருப்பது போல் நினைத்துக் கொண்டு செயல்படும் நிலைய கானல் நீராக நாம் காண்கின்றோம். செல்வம் என்ற நிலையில்லாத ஒரு பொருளைப் பற்றிக்கொண்டு நிலையான

பக்தி நெறியைக் கைவிட்டுவிடுவதினால் நிலையில்லாத செல்வத்தைக் கானல்நீர் என்று குறிப்பிட வந்த கவிஞர் தீய பேய்த்தேர் என்று செல்வத்தை உருவகப்படுத்தி கூறியுள்ளார்.

நவீனத்துவம் என்பதற்கு க.பஞ்சாங்கம் தரும் பொதுவான விளக்கங்களுள் ஒன்றான இலக்கிய வகைகளுக்குக்கிடையேயான எல்லைக் கோடுகளை மங்களாக்கியதும். அதில் நாவல் எழுத்து கவித்துவம் மிக்கதாகவும் கவிதை படைப்பு தகவல் வழங்கும் உரைநடைப் பணியாகவும் மாறத்தொடங்கின' என்ற பொதுத்தன்மை நாமக்கல்லாரின் கவிதைகளில் அமைந்திருக்கும் பாங்கு நோக்கத்தக்கது.

## யதார்த்தவாதம்

“கலை, இலக்கியம் என்பவை மனிதசமூகத்தைப்பற்றியது என்ற கருத்தோடுயதார்த்தவாதம் தோன்றியது என்பர்.கலைக்கு இரண்டு முக்கிய கூறுகள்உண்டு.

1. சுற்றுப் புறத்தைப் புரிந்து கொள்வது (Cognitive)
2. சுற்றுப் புறத்தைப் பிரதிபலிப்பது (Reflection )

இதில் சுற்றுப்புறம் என்பது சமூகத்தை மட்டும் தான் குறிக்கிறது. எனவே கலைஞனின் முக்கியமான பண்பு சமூகத்தைப் புரிந்து கொள்வதும் அதைப் பிரதிபலிப்பதுமாகும்.என்று காமராசு தனது நவீனத் திறனாய்வு போக்குகள் என்ற நூலில்குறிப்பிட்டுள்ளார். எஸ்.தோத்தாத்ரி, யதார்த்தவாதத்தின் மூன்று வகைகளாகப் பின்வரும் தன்மைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. தன்னைச்சுற்றியுள்ளவற்றைக்கூர்மையாகக் கண்டு ஆய்வு செய்யும் முயற்சி (சுபாவயதார்த்தவாதம்)
2. சமூக முரண்பாடுகள் முற்றிய நிலையில் குறைகளைச்சாடும் போக்கு (விமர்சிக எதார்த்த வாதம்)
3. உழைக்கும் வர்க்கம் சார்பாக நின்று கலைப் படைப்பை உருவாக்கும் போக்கு (சோஷலிசய தார்த்த வாதம்)

குறிப்பிடுகின்றார். மேற்கண்ட தோதாத்ரி கருத்துகளையும் ரா. காமராசு தெரிவித்துள்ளார். மேற்கூறப்பட்ட யதார்த்த வாதத்தை முழுவதும் தன்னைச் சுற்றியுள்ள மனிதர்கள், சமுதாய மாற்றங்கள், கலாச்சார மாற்றங்கள் தனது அனுபவங்கள் என அனைத்தையும் யதார்த்த நடையில் தந்த ஒரு எதார்த்தமான படைப்புதான்

நாமக்கல்லார் அருளித் தந்தபஜ கோவிந்தம். தமிழுணர்வு. தமிழர் பண்பாடு என்று எதையும் எழுத மறந்தாரில்லை.

யாவத்பவனோநிவசதிதேஹே
தாவத்ப்ருச்சதி குசலம் கேஹே

ஆரோக்கியத்தோடு, எது நாள் வரை நீ பொருள் ஈட்டுகிறாயே. அது நாள் வரை நிஜமாகவே சொந்தங்கள் உன்னிடம் ஒட்டிக் கொண்டிருக்கும் என்றுபொருள் கூற வந்த கவிஞர்

வருமானம் உள்ள மட்டே பரிவாரம் வந்து சேரும்
விரிவாகும் சேம லாப விசாரணை வெளிவேஷம்தான்;
பருமானப்பலமுண்டாகில் பந்துபாத்தியமும்உண்டாம்
உருமாறிக்கிழமாய் விட்டால் உன்னையார் கேட்பார் பின்னை?

மேலேகூறப்பட்டநிகழ்வுகளில் ஒவ்வொரு சொற்களையும்சொல்லிக் கொண்டு வரும்பொழுதுபடிப்பவரிடம்இவ்வுலகவாழ்க்கைபற்றிய கற்பனை கூடுகிறது. அதன் செயல்முறை வாசகனின் மனதை ஆட்கொள்கிறது. நாமும் அதைச் செயல்படுத்த வேண்டிய "போலச் செய்தல்"பாங்கும்உருவாகின்றது.பலரின் ஆடம்பரமான எழுத்துகள் படிப்பவரிடம்கவனச் சிதைவு ஏற்படுத்திவிடும் நிலையில் நாமக்கல்லார் கையாண்ட சொற்கள் பொருள் பொதிந்த நிலையில் அதன் கவனம் கணம் குறையாமலும், மிகச் சாதாரணமாக, சுவை குன்றாத மென்மையான எழுத்துகள் கண்டிப்பாக இலக்கிய அந்தஸ்தைப் பெற்று விடும்" என்பதை நிரூபித்து விட்டன.

## முடிவுரை

நாமக்கல்கவிஞர் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் புதுவித அழகுடன் மிளிர்வதுடன் பல்வேறு விதமான கோட்பாடுகளையும் ஆராய்ச்சி அணுகுமுறைகளையும், புராதனசிந்தனைகளையும் தனக்குள் தாங்கி நிற்கும் நிலை களன்களாகப் பட்டொளி வீசுகின்றது என்பதை மேற்கொண்ட ஆய்வில் நாம் அறியமுடிகிறது. தனது மொழி ஆளுமையைப் பல்வேறு எல்லைகளில் பயன்படுத்தி தமிழ் மொழியின் எல்லையை நாட்டின் எல்லையையும் கடந்து விரிவுபடுத்தியுள்ளார் கவிஞர். மொழியின்மரபும்,வளமும் மாறாத வகையில் மொழியை அப்படியே வளர்த்தெடுப்பதற்குஅவருக்குக் கிடைத்த தகுந்த வாய்ப்புகளை உருவாக்கி அதன் வழி தமது பயணத்தைத் தொடர்ச்சியாகப் பயணித்துள்ளார் என்பதைமேற்கண்ட ஆய்வில் அறியலாம். வரையறைக்குள் அடங்கிவிடும் கவிஞர் அல்லர் அவர். விரிவான வானமும் வண்ணமில்லா காற்றும் வடிவமில்லா நீரும் அவருக்கு என்றும் பணிந்து கொண்டே இருப்பன.